பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 09 புதன்கிழமை [23-06-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 179

# சகல மனிதப் புதைகுழிகளையும் தோண்டி உண்மையை வெளியிடுக!

## சர்வதேசப் பிரதிநிதிகள் கொழும்பில் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 23

"வடக்கு - கிழக்கு மாகாணம் மற்றும் தென்னிலங்கையில் உள்ளதாகக் கருதப்படும் மனிதப் புதைகுழிகள் யாவும் தோண்டப்பட்டு உண்மை நிலை வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்."

- இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையும், ஆசிய பவுன்டேசன் அமைப்பும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

கொழும்பில் நேற்று இரவு நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் இந்த விவரத்தை அந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் வெளியிட்டனர்.

செம்மணிப் புதைகுழி தோண்டும் பணியில் பார்வையாளர்களாகப் பங்குபற்றிய சர்வதேச மன்னிப்புச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர்கள் அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தென்னிலங்கையில் டாக்டர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணம், மந்திகை வைத்திய சாலைகளில் பணிபுரியும் டாக்டர்கள் நேற்று இரு மணி நேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

காலை 8 மணி முதல் 10 மணிவரையுமே இந்த வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

(உ-3-109)

## ஈழ மாணவி ஒருத்தியை கனடாவில் காணவில்லை

ரொரன்டோ, ஜூன் 23

கனடாவில் வசித்து வந்த —இளவாலையைச் சேர்ந்த— மாணவி ஒருத்தி கடந்த 12 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளமை அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரொரன்டோ நகரில் தனது பெற்றோருடன் வசித்து வந்த ஆனந்தவேல் சர்மினி (வயது 15) என்ற மாணவி கடந்த 12 ஆம் திகதி முதல் மர்மமான முறையில் காணாமற் போயுள்ளார்.

பாடசாலை விடுமுறை காலத்தில் பகுதி நேர வேலையில் சேர்வதற்காக நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அந்த மாணவி அன்று வீட்டில் இருந்து புறப்பட்டதாகவும்—

அதன் பின்னர் அவர் குறித்துத் தகவல் கிடைக்கவில்லை என்றும்—

அவரது தந்தை தெரிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பாமோட்டையில் 4 படையினர் புலிகளின் தாக்குதலில் உயிரிழப்பு!

மன்னார், ஜூன் 23

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 'போர்க் கோஷம் —4' இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பாப்பாமோட்டைப் பகுதியில் காவலரண்களை அமைத்துக் கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 3-30 மணியளவில் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் 4 படையினர் உயிரிழந்தனர்; இரு படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் அநுராதபுரம் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் இரு விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும்—

அவர்களில் ஒருவரின் சடலத்தைத் தாங்கள் கைப்பற்றியதாகவும்—

படைத்தரப்புத் தெரிவித்தது.

இந்தச் சண்டையில் உயிரிழந்ததாகத் தெரிவித்து 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் மன்னார் ஆஸ்பத்திரியில் நேற்றுப் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டது.

மன்னார் பதில் நீதிவான் கஜஸ் செல்டானோ நேற்று மாலை சடலத்தைப் பார்வையிட்டு மரண விசாரணைக்கு உத்தரவிட்டார்.

[உ-3-21]

## ஆயுதம் தாங்கிய விவசாயிகள் மீது தாக்குதல்!

மட்டக்களப்பு, ஜூன் 23

பொலன்நறுவ மாவட்டத்தில் அரங்கவில என்ற இடத்தில் இனந்தெரியாதோர் நேற்று நடத்திய தாக்குதலில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

வயல் வேலைக்குச் சென்று கொண்டிருந்த ஆயுதபாணிகளான — மூன்று விவசாயிகளை இனந்தெரியாத குழு ஒன்று வழிமறித்ததாகவும் —

அந்த விவசாயிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும் —

அவர்களிடம் இருந்த ஆயு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் ஆஸ்பத்திரி ஜெனரேட்டர் தகர்ந்தது

### புலிகள் மீது படையினர் குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஜூன் 23

மிருசுவில் ஆஸ்பத்திரி வளவில் வைக்கப்பட்டிருந்த— இலங்கை மின்சாரசபையினால் இயக்கப்படும்— 150 கே. வி. வலுவுடைய— ஜெனரேற்றர் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் திடீரென வெடித்துத் தீப்பற்றி எரிந்து நாசமாகியது.

இந்த ஜெனரேட்டர் வைக்கப்பட்டிருந்த கொட்டகையும் எரிந்து சாம்பரானது.

இந்த ஜெனரேட்டர் வெடித்த அதிர்வினால் ஆஸ்பத்திரிக் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

இந்த ஜெனரேட்டர் நேரம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவுக் கடலில் 4 குருநகர் மீனவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 23

மண்டைதீவுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நான்கு மீனவர்கள் நேற்று நண்பகல் ஒன்றரை மணியளவில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்த இந்த நால்வரையும் விடுவிப்பது தொடர்பாகக் கடற்படை அதிகாரிகளுடன் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் தொடர்பு கொண்டுள்ளார்.

[10ஆம்பக்கம் பார்க்க]

## வன்னிப் போக்குவரத்து

### பாப்பாமோட்டை ஊடாக புதிய பாதை திறப்பு!

வவுனியா, ஜூன் 23

இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவதற்காக — புதிதாக பூநகரி — மன்னார் வீதியில் — பாப்பாமோட்டை ஊடாகத் திறக்கப்பட்டுள்ள பாதையூடாக நேற்று ஆயிரம் பயணிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்தனர்.

கடந்த இருவாரங்களாகத் தடைப்பட்டிருந்த இந்தப்

10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாடற்ற

### வன்னிப் பகுதிக்கு மீண்டும் உணவுடன் வாகன அணி

வவுனியா, ஜூன் 23

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வாகன அணி இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு இன்று செல்லவிருக்கின்றது.

இந்த வாகன அணியில் வரும் 20 லொறிகளில் 10 லொறிகள் கிளிநொச்சிக்கும், எஞ்சிய லொறிகள் முல்லைத்தீவுக்கும் செல்லும் என்று மல்லாவியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

படையினர் மேற்கொண்ட ''போர்க் கோஷம்'' நடவடிக்கை காரணமாக வன்னிக்கான உணவு விநியோகம் கடந்த ஒரு மாதமாகப் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## 25 இளைஞர்கள் மன்னாரில் கைது!

### நேற்று மாலை மட்டும் ஐவர்

மன்னார், ஜூன் 23

மன்னார் நகரில் ஐந்து இளைஞர்கள் நேற்று மாலை 5-30 மணியளவில் கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியாவில் இருந்து வந்து கிளர்ச்சித் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் இவர்களைக் கைது செய்தனர்.

பிரதான வீதியில் சின்னக்கடையில் உள்ள சோனியா விடுதியில் தங்கியிருந்த மூன்று இளைஞர்களும் —

நகரில் மற்றொரு இடத்தில் வைத்து மற்றும் இரு இளைஞர்களும் —

கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஐந்து தினங்களில் மன்னார் நகரப் பகுதியில் 25

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு அப்பால்

### காணாமற்போன கப்பல் விடுதலைப் புலிகள் வசம்?

கொழும்பு, ஜூன் 23

மலேசியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல் ஒன்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருக்கலாம் என்று சர்வதேச கடற்போக்குவரத்து பணியகம் தெரிவித்துள்ளதாக இலங்கை வானொலி அறிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை பாக்கியம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாக்கியம் அவர்கள் 22-6-99 அன்று காலமானார்.

அன்னார் சுப்பையா செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சின்னத்துரை (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும் குகேந்திரனின் அன்புத் தாயாரும் மதியாபரணம். ராஜகஸ்தூரி (கஸ்தூரி மாஸ்ரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [23-6-99] முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (நல்லூரில்) நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. குகேந்திரன்
(மகன்)

639, நாவலர் வீதி,
நல்லூர்.

(66818)

## சபாரத்தினம் நல்லமுத்து

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் நல்லமுத்து 22 — 06 — 99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், பூபதி அம்மா, லஷ்சுமி அம்மா, கந்தசாமி, தவராசா, விஜயரட்ணம், புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகலிங்கம், சிவகுருநாதன், இந்திராணி, சிவனேஸ்வரி, நித்தியலட்சுமி, ஜெக்தீஸ்வரன் (தாதியர் பயிற்சி பாடசாலை, பாதுகாப்பு ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-06-99) புதன்கிழமை காலை 11. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. ஜெகதீஸ்வரன்
(மருமகன்)

நீர்வேலி வடக்கு,
மாசுவன் சந்தி.

(66812)

## ஐஸ்கட்டி உற்பத்தி

குருநகர், ஜூன் 23

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனையில் ஐஸ் கட்டி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐஸ் கட்டிகளை விரும்புவோர் சமாசத்துடன் பகல் நேரங்களில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என சமாசத்தலைவர் சின்னையா தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

(இ - 51)

# ஓராண்டு நினைவஞ்சலி



## சிவஸ்ரீ கனக பாலசுப்பிரமணிய ஐயா

(பிரபல முத்துச் சப்பர அமைப்பாளர்,
அச்சுவேலி, பத்தமேனி, தீர்த்தாங்குளப்பதி)

திதி: இன்று (23 – 06 – 99) புதன்கிழமை
பூர்வபக்க தசமி

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:


மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தீர்த்தாங்குளப்பதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(சி/7979)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

### 9 ஆம் ஆண்டு



அமரர்
## தில்லையம்பலம் இராஜகோபால்
[உப தபால் அதிபர்- கொக்குவில்]

தோற்றம்: 14 – 12 – 1938
மறைவு: 20 – 06 – 1990

ஆண்டுகள் பல உருண்டோடினாலும் — எங்கள்
அருமைக் குலவிளக்கே! உங்கள் நினைவுதான்
எம்மை விட்டகலுமோ? அருமை அப்பாவே!
குருவாக நின்று எம்மை ஆளாக்கி விட்டவரே!
கடமையில் கண்ணாயிருந்து பணி செய்த
கண்ணியவானே
கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்க
வைத்து விட்டீரே;
உடன்பட்டே வந்தானோ கங்குவும் உம்மிடமே?
விடந் தலைக் கேறியது போல் துடிக்கின்றோம் நாம்.

### 31 ஆம் நாள்



செல்வன்
## இராஜகோபால் கங்கேசன்
[99 A/L வர்த்தகப்பிரிவு மாணவன், கொக்குவில் இந்துக்கல்லூரி]

தாயின் மடியில்: 11 – 01 – 1981
இறைவன் அடியில்: 24 – 05 – 1999

எங்கே ஐயா எம்மை விட்டுப் பிரிந்து சென்றாய்?
கங்கு கடைக்குட்டியே! எங்கள் செல்வ மணியே!
மங்காப் புகழுடனே எம்முடன் நீ வாழ்வாய் என
தங்கக் குட்டியே உனை நினைத்திருந்தோமே!
தாங்காத் துயர் தந்து இறையடி சேர்ந்து விட்டாய்!
சங்கெடுத்தூதி அவன்துதி பாடி நின்றாயே!
மாத்தனையான் பாத கமலத்தை அலங்கரிக்கச்
சென்றாயோ?
என்றும் உன்னுருவம் எம் நெஞ்சைவிட்டகலாதே!

என்றும் நினைவில் வாழும்
— குடும்பத்தினர்.

சம்பியன் லேன்,
கொக்குவில்

[சி/7977]

## மூன்று இளைஞர் படையினரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 23

வல்வெட்டித்துறை, ஈச்சை மோட்டைப்பகுதிகளில் மூவர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சோமசூரியம் பாக்கியராசா [வயது 39 — வல்வெட்டித் துறை], பத்திநாதர் ஸ்ரனிஸ்லோஸ் [வயது 28 — ஈச்சை மோட்டை], பாலசுப்பிரமணியம் பாலேஸ்வரன் [வயது 22 —வல்வெட்டித்துறை] ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

[உ-5-17-173]

## கல்வி நிர்வாகம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்டக் கல்வி நிர்வாக இணைப்பாளர் கலாநிதி என். தணிகாசலம் பிள்ளையால் எழுதப்பட்ட 'கல்வி நிர்வாகம்' என்ற நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. வரவேற்புரையை காரை எம். பி. அருளானந்தனும், வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகமும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக உயர் மட்ட ஆய்வு பீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸும் நிகழ்த்துவர்.

நூலின் முதற் பிரதியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும், சிறப்புப் பிரதியை கு. கங்கைவேணியனும் பெற்றுக் கொள்வர்.

ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா நிகழ்த்துவார். பதிலுரையை நூலாசிரியர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை வழங்குவார்.

(உ-6)

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய், தேவயானி,
ரம்பா, மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன் வந்தாய்
10.30, 2.30,
அடுத்த வெளியீடு
அண்ணாமலை
[சி/7973]

நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று முதல்
குதூகல ஆரம்பம்
கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
(உலக அதிசயங்களின் காட்சிகளும் அனேக காட்சிகளும் அமெரிக்காவில் படமாக்கப்பட்டது)
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[66814]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்கில் பிரச்சினையை பாரதீய ஜனதா தேர்தலுக்குப் பயன்படுத்தமாட்டாது

## ஆனால் காங்கிரஸுக்கு தகுந்த நேரத்தில் பதில் கொடுக்கும்

புதுடில்லி, ஜூன் 23

கார்கில் பிரச்சினையை தேர்தல் விடயமாக்கப் போவதில்லை என்றும் — ஆனால் காங்கிரஸ் மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகள் கார்கில் பிரச்சினை தொடர்பாக எழுந்துள்ள கேள்விகளுக்கு தகுந்த நேரத்தில் பதில் அளிக்கப் போவதாகவும் — பாரதீய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

அதேசமயம் காங்கிரஸ் கட்சி எழுப்பியுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் சரியான நேரத்தில் சில விடயங்களை பாரதீய ஜனதாக் கட்சி முன்வைக்கும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலர் வெங்கையா நாயுடு சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களுக்கு எதிரான சண்டையில் மத்திய அரசு மற்றும் இராணுவத்தை ஆதரிப்பதாக கூறும் காங்கிரஸ் கார்கில் பிரச்சினை குறித்து வாஜ்பாய் அரசை குறை கூறிக் கொண்டு இந்த விடயத்தை அரசியலாக்க முனைகிறது. அத்துடன் சரியான நேரத்தில் சில விடயங்களை எழுப்பப் போவதாகவும் அச்சுறுத்தி வருகின்றது என்றும் அவர் கூறினார்.

மக்களவைத் தேர்தலுக்கு முன்பாகவே கார்கிலில் சண்டை முடிவடைந்து விடும் எனத் தெரிவித்த நாயுடு தேர்தலை ஒத்தி வைக்கத் தேவை இல்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை ஊடுருவல்காரர்களையும் தனது இராணுவத்தினரையும் பாகிஸ்தான் விலக்கிக் கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் எனவும்—

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிடில் மேலும் பல கார்கில்கள் உருவாகும் என்றும் — பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப் கூறி உள்ளார். (இ-க)

## காஷ்மீரில்
# சண்டையை நிறுத்துமாறு 'ஜி 8' நாடுகள் கோரிக்கை

காஷ்மீரில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள எல்லைக் கோட்டைத் தாண்டிச் சென்று போரிடும் செயலை பாகிஸ்தான் உடன் நிறுத்தவேண்டும் என்று ஜி 8 நாடுகளின் தலைவர்கள் கேட்டுள்ளனர்.

ஜேர்மனியின் நகரான ஹொலோனில் நடந்த ஜி 8 நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டை அடுத்து வெளியிடப்பட்ட பிரகடனத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் செயலைக் கண்டித்துள்ள அந்தப் பிரகடனம் உடனடியாகப் போரை நிறுத்தி இருநாடுகளும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்றும்—

ஒரு நாட்டின் எல்லையை மீறி ஆயுதங்களுடன் சென்றுள்ள செயலை அனுமதிக்க முடியாது என்றும்—

உடன் படைகளை விலக்க வேண்டும் என்றும்— தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதி தமது நாடு மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை தம் மீது திணிக்கப்பட்டது ஒன்று என்றும்—

சமாதானப் பேச்சுக்களில் நம்பிக்கை கொண்டுள்ள நாம் எமது மண்ணையும் இழக்கத் தயாரில்லை என்றும்— விளக்கினார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான் பிரதிநிதி தமதுநாட்டின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறினார்.

எனினும் அதற்கு அவ்வளவு வரவேற்புக் கிடைக்கவில்லை என்றும்—

இந்த மாநாட்டுப் பிரகடனம் இந்தியாவுக்கு கிடைத்த சர்வதேச வெற்றி என்றும்— ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (இ-3)

# கொசோவோவுக்கு உதவி; கிளின்ரன் இணக்கம்

கொசோவோவுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க அதிபர் கிளின்ரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் பிரதமர் ஜெர்ஹாட் ஸ்குருடருடன் பேர்லினில் நடத்திய பேச்சுக்களின் பின்னரே கிளின்ரன் மேற்படி தகவலை வெளியிட்டார்.

பால்கன் மறுசீரமைப்புக் குறித்து அடுத்த மாதம் பொஸ்னியாவின் தலைநகர் சரயேவோவில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தப்படும் என்றும் அதிபர் கிளின்ரன் அறிவித்துள்ளார்.

இதே வேளை —

கொசோவோவில் சிவில் நிர்வாகம் மற்றும் அகதிகள் பிரிவுக்குப் பொறுப்பாக இரண்டு பிரதிநிதிகளைஐ.நா பொதுச் செயலர் கோபி அனான் நியமித்துள்ளார். (இ-க)

# கார்கில் உண்மை நிலையை அரசு தெரிவிக்க வேண்டும்

## காங்கிரஸ் கோருகிறது

கார்கில் பகுதியின் உண்மை நிலை பற்றி பாரதீய ஜனதா அரசு எதிர்க்கட்சிகளுக்கு தெரிவிக்கவேண்டும் என்று காங்கிரஸ் கேட்டுள்ளது.

கார்கில் பிரச்சினை தொடர்பாக 'ஜி-8' மாநாட்டில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை இந்தியாவுக்கு கிடைத்த வெற்றியா என்பதில் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அஜித்யோகி சந்தேகம் தெரிவித்துள்ளார்.

'ஜி-8' அறிக்கையில் பாகிஸ்தானின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஊடுருவல்காரர்களுக்கு பாகிஸ்தான் தரும் ஆதரவையும் சுட்டிக்காட்டவில்லை.

கார்கில் நிலை குறித்து உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரிஜேஷ் மித்ராவும் மாறுபட்ட வகையில் பேசி வருகின்றார் எனவும் —

இப்படிஅஜித்யோகி மேலும் கூறினார். (இ-க)

# அகதிகளை அழைக்கும் பணி ஜூலை 1 இல்

## உலக அரங்கில்

பிறிஸ்ரீனா, ஜூன் 23

கொசோவோவில் அண்மையில் இடம்பெற்ற நேட்டோ தாக்குதல்களின் போது இடம்பெயர்ந்து அகதிகளாக அண்டைய நாடுகளுக்கு சென்றவர்களை மீண்டும் அழைத்து வரும் பணி ஜூலை முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நேட்டோ அறிவித்துள்ளது

பல்லாயிரக் கணக்கானோர் மசிடோனியா மற்றும் அல்பேனியா ஆகிய இடங்களில் தஞ்சம் அடைந்திருப்பது தெரிந்ததே.

இதேவேளை நேட்டோவின் அமைதி காக்கும் படை கொசோவோ சென்றதை அடுத்து இதுவரை ஒரு லட்சத்து 40 ஆயிரம் அல்பேனிய அகதிகள் கொசோவோ சென்றடைந்துள்ளனர்.

இவர்களில் பலர் நிலக் கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகளில் சிக்கி காயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க)

# ஆப்கன் தீவிரவாதிகளுடன் பாக். ராணுவம் ஊடுருவல்

## ஜேர்மன் அதிகாரிகள் தெரிவிப்பு

பெர்லின், ஜூன் 23

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளுடன் பாகிஸ்தான் இராணுவம் ஊடுருவியுள்ளது. இதற்கு எம்மிடம் போதிய அதிகாரபூர்வமான ஆதாரங்கள் உள்ளன.

மேற்கண்ட தகவலை ஜேர்மன் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஊடுருவியுள்ளவர்களை விரட்டும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதாக இந்தியா அறிவித்து உள்ளது.

பாகிஸ்தானில் இருந்து ஊடுருவியுள்ளவர்களே அவர்கள் என்று இந்தியா தெரிவித்துள்ளது

பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 700 படைவீரர்கள் இராணுவ சாதனங்களுடன் கடந்த சில வாரங்களுக்குள் இந்தியாவுக்குள் ஊடுருவினர் என்றும்.

இவர்களுடன் ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளும் இணைந்து உள்ளனர் என்றும் — ஜேர்மன் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

இந்தியா — பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைக்கு பாகிஸ்தானின் ஊடுருவல் தான் காரணம் என்ற உண்மையை ஐரோப்பிய சமூக நாடுகளும் ஜேர்மனியும் உணர்ந்துள்ளன என்று ஜேர்மன் வெளியுறவு அமைச்சின் ஆசியாப்பிரிவின் தலைவர் ஹூஸ்கான் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்துள்ளது. (இ-3-க)

# அமைச்சரவை பதவி விலகியது

சிலி நாட்டில் அதிபர் எட்வட்டோ பிறீஜினின் அமைச்சரவை நேற்று முன்தினம் பதவி விலகியது.

இந்த நடவடிக்கை அமைச்சரவையை மறுசீரமைக்க உதவிடும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

சிலி நாட்டில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையை குறைக்கும் நோக்கிலான பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டங்களை ஆரம்பிக்கப் போவதாக அதிபர் எட்வட்டோ பிறீஜின் அறிவிக்க இருந்த வேளையில் அமைச்சரவையின் பதவிவிலகல் இடம் பெற்றது. (இ-க)

# 'இன்ரநெற்' மூலம் சதுரங்க விளையாட்டு

நியூயோக், ஜூன் 23

உலக சதுரங்கச் சாம்பியனான காரி காஷ்பரோ உலகெங்கும் உள்ள சதுரங்க விளையாட்டு வீரர்களுடன் 'இன்ரநெற்' மூலம் விளையாட உள்ளார்.

'காஷ்பரோவுக்கு எதிரான உலகவீரர்கள்,' என்ற பெயரிலான இந்தப் பந்தயம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காஷ்பரோ நியூயோர்க்கில் திங்கட்கிழமை இரவு தமது முதலாவது காய் நகர்த்தலை வெள்ளைக் காய்களுடன் தொடக்கவுள்ளார்.

காஷ்பரோவுக்கு எதிராக சவால் விட விரும்பும் ஆயிரக் கணக்கான சதுரங்க ஆட்டக்காரர்களை இப்பந்தயம் ஈர்க்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-க]

# கொசோவோ போராளிகளுடன் நேட்டோ ஒப்பந்தம் கைச்சாத்து

## யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதாக அறிவிப்பு

பிறிஸ்ரீனா, ஜூன் 23

கொசோவோ விடுதலை இராணுவம் ஓர் இராணுவப் படையாக தொடர்வதை முடிவுக்குக் கொண்டுவர நேட்டோவும் கொசோவோ விடுதலை இராணுவமும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

நேட்டோ தளபதியும் கொசோவோ விடுதலை இராணுவத்தின் அரசியல் பிரிவுத் தலைவரும் தலைநகர் பிறிஸ்ரீனாவில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

கொசோவோவில் இருந்து யூகோப்படைகள் முற்றாக விலகிய பின் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை — கொசோவோவில் எந்த ஒரு யூகோப் படையினரையும் நேட்டோவின் அமைதிப் படையினர் விட்டு வைக்கப் போவதில்லை என நேட்டோ அறிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து கொசோவோ யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதாக நேட்டோ அறிவித்துள்ளது. [இ-க]


## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் செயலர்
குருபரனின்
அன்புத் தந்தையார்
**முருகேசு வல்லிபுரம்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கழக அங்கத்தவர்கள்
மத்திய விளையாட்டுக் கழகம்
உடுவில்.

(சி/7971)


# கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஜூன் 23

வலிகாமம் கல்வி வலயம் பிரிவு II. III ஐச் சேர்ந்த பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கான பாட மேம்பாட்டு கருத்தரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இக்கருத்தரங்குக்கு பாடசாலைகளில் கணிதம் விஞ்ஞானம், அழகியல் உடற்கல்வி, ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களில் [illegible] இரண்டு ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(இ-152)

# சமய சந்நிதிகளில்

புன்னாலைக் கட்டுவன் ஆயாக் கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான வசந்தோற்சவ திருவிழா இன்று இடம்பெற உள்ளது. விசேட மேளக் கச்சேரியும் சுவாமி வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறும். [இ 133]

★ ★ ★

அரியாலை வெட்டுக் குளம் ஸ்ரீ. புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதிஆரம்பமாகிநடைபெற்றுவருகின்றது இன்று வேட்டைத் திருவிழாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அஷ்டோத்தர சங்காபிஷேகமும் நடைபெறும். (இ-3)

★ ★ ★

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் ஜூலை 16 ஆம் திகதி காலை ஆரம்பமாகும்.

இந்த ஆலயத்தை புனரமைக்கும்பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பத்து அடி நீளமுள்ள பத்து concrete தூண்கள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் அடை முட்டையும், வாழைக் குட்டியும் உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (66804)

### வீடு விற்பனைககு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் இல. 31 இல் அமைந்துள்ள 1½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சுனில் ஆட்ஸ், 272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/7972)

### வகுப்புக்கள்

ஆண்டு 6 — 11 வரை கணிதம், ஆங்கிலம், தமிழ் வகுப்புக்கள் நடைபெறுகின்றன தொடர்பு: சிவசக்தி (ஆசிரியை), 693A, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (66807)

### திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல் மாடி, (நன்னாதிட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (66596)

### தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்ய, கோழி சுத்தம் செய்யத்தெரிந்த 18 வயதிற்கு உட்பட்ட ஆள் தேவை. தொடர்பு: தனபாலசிங்கம், [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (66803)

### இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக கோழிகள்(பாதிக் கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மிக நுட்பமான நிறுவை. அத்துடன் அடை முட்டையும் வாழைக் குட்டிகளும் உண்டு. தொடர்பு:(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [66802]

### தவறிவிட்டது

நாகலிங்கம் அழகுராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை(553382475V), விசேட அடையாள அட்டை (0905007624)20 06.99 இல் சுழிபுரத்திற்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நா. அழகுராசா எச்சாட்டி, சுதுமலை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (66798)

நாவற்காடு அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிராசா பாலசூரியர் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.632612818V), விசேட அ. அட்டை இரண்டும் நல்லூரில் இருந்து அச்சுவேலிக்குப் பிரயாணம் செய்யும் போது 750 இலக்கப் பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி வடக்கு விஜிதா தொலைத் தொடர்பகத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (66780)


ALL PURPOSE MULTI DIRECTIONAL

KOBE-52



TV/RADIO ANTENNA

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place, (Behind Milk Bar) Bambalapitiya Junction, Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

(சி/7901))



## சுனில் ஆட்ஸ்

- Photo Chorome
- Acme
- Photo Friends
- Colour Chorome

நீங்கள் விரும்பிய Colour Lab இல் கழுவிப் பெற்றுக் கொள்ளலாம். துரிதசேவை. 26-06-99 அன்று படச் சுருள்கள் (Colombo) கொழும்புக்கு அனுப்பப்படும்.

**சுனில் ஆட்ஸ்**
272, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(சி/7974)


## ஸ்ரீலங்கா
## தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கம்
யாழ். பிராந்திய அலகு (NCCASL)
## கலந்துரையாடல்

1. நாள் ; 26 – 6 – 99 சனிக்கிழமை
2. நேரம் : காலை 9·30 மணி
3. இடம் : சங்கப்பணிமனை 461, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,
4. விடயம்: யாழ்.மாவட்ட புனர்நிர்மாண வேலைகளும், ஒப்பந்தகாரர்களின் செயற்பாடும்.

'இக்ராட்' அரசதிணைக்களங்கள், உள்ளூராட்சிச் சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் தவறாது பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இணைப்பாளர்.

461, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (66746)


## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கிகாரம் பெற்ற
லுமும்பா பல்கலைக்கழகம் போன்ற
ரஷ்ய பல்கலைக்கழகங்களுக்கு
கீழ்க்காணும் துறைகளுக்கு அனுமதி பெற்றுத்தரப்படும்.

1) மருத்துவம் (ஆங்கிலம்)
2) பொறியியல் (ஆங்கிலம்)
3) விஞ்ஞானம்
4) கணனியியல் (ஆங்கிலம்)
5) பொருளாதாரம்
6) ஏனைய துறைகள்

அனுமதி பெற்றுத்தர கட்டணம் எதுவுமில்லை.
விண்ணப்ப இறுதித் திகதி: 20 - 07 - 99
இறுதிச் சந்தர்ப்பம்.
நேரிலோ கடித மூலமோ உடன் தொடர்பு கொள்ளவும்.

Dr. க. சிவனடியான்
நவாலி, மானிப்பாய்.
[66808]


## சாவகச்சேரி நகரசபை
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 09 - 07 – 99ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10. 30 மணிக்கு அவை திறந்து பரிசீலிக்கப்படும்,

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) 'தரம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையவராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | வட். 1, நந்தசாமி கோயில் வீதி வலது பக்கம் 3 ஆம் ஒழு. கிரவலிடல். | 1000/- | 500/- |
| 02. | வட். 1. சோதியம்மா வீதி கிரவலிடல். | 1000/- | 500/- |
| 03. | வட். 4, கிராம்புவில் ஒழுங்கை, கிரவலிடல். | 2000[- | 500/- |
| 04. | வட். 5, யாழ் வீதி 4ஆம் ஒழுங்கை கிரவலிடல் | 1000/- | 500/- |
| 05. | வட். 4, வண்ணாங்குளம் வீதி, கிரவலிடல் | 1000/- | 500/- |
| 06. | வட். 6. வேலயுதம் வீதி, மதகு அமைத்தல் | 2000/- | 500/- |
| 07. | வட். 9, காளிகோயில் வீதி, கிரவலிடல் | 1000/- | 500/- |
| 08. | வட். 8, கண்ணாடிப்பிட்டி மயான வீதி — தாரிடல் | 1000/- | 500/- |
| 09. | வட். 9, சண்முகம் வீதி கிரவலிடல் | 1000- | 500/- |
| 10. | வட். 11, மீனாட்சியம்மன் வீதி கிரவலிடல் | 1000/- | 500 - |
| 11. | வட். 3, முதலாம் கட்டை 1ஆம் ஒழு. மதகு அமைத்தல் | 2000/- | 500/- |
| 12. | கண்ணாடிப்பிட்டி மயான கட்டடத் திருத்தம் | 2000/- | 500/- |

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 7 – 7 - 99 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. மு. செ. சரவணபவ
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி 22–6–99
(சி/7965)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி நாகமுத்து யோகேஸ்வரி
(ராணி)
(குடும்ப நல உத்தியோகத்தர் — கைதடி தென்கிழக்கு)

தாயின் மடியில்: 21–05–1963
தருமத்தின் மடியில்: 23–06–1993

உங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

கைதடி தெற்கு,
கைதடி.
(66772)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருசுவில், துர்க்காபுரம்

## அருள்மிகு ஸ்ரீஞானதுர்க்கை அம்பாள் மகா சங்காபிஷேக வைபவம்

அம்பாள் அடியார்களே!

நாளை 24—06—1999 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அம்பாளின் ஆலயத்தில் சகடை வெள்ளோட்ட விழாவும் அதனைத் தொடர்ந்து வருடம் தோறும் நிகழும் மகா சங்காபிஷேக வைபவமும் பூசையும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றேன்.

— ஆலய தர்மகர்த்தா

படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

(66747)

## ஈராண்டு நிறைவு நினைவலைகள்

தோற்றம்
17 — 09 — 1945



மறைவு
23 — 06 — 1997

### அமரர் சின்னத்துரை நாகராசா

[நயினாதீவு — அளவெட்டி — வளலாய்]

எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள்
இரண்டுதான் மறைந்தன — உங்கள்
இனிய நினைவுகள் எம்நெஞ்சைவிட்டு அகலவில்லை.
கனிவான தோற்றம் எம் கண்களை விட்டு
மறையவில்லை.
அன்பான வார்த்தைகள் இன்னும் காதில்
ஒலிக்கின்றனவே!
எப்போதும் நீங்கள் எம் நினைவினிலே
வாழ்வீர்கள்.

உங்கள் ஆத்மா என்றென்றும்
இறைவனடி நிலைப்பதாக.

மனைவி, உற்றார், உறவினர்.

254, பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

(66782)

## நெஞ்சகலா நினைவலைகள்



### அமரர் ஐயாத்துரை கனகரத்தினம்

மண்ணகம்
26–05–1936

விண்ணகம்
24–05–1999

பாசமும் பரிவும் அன்பும்
பெருக்கெடுத்தோடும் நெஞ்சும்
ஆசையாய் அணைக்கும் கைகள்
அறிவுசொல் வாயும் என்றும்
வீசிடும் ஒளிசேர் கண்ணும்
விலகியே போனதாமோ?
ஈசனின் பாதம் சார்க
எம் கரம் கூப்புகின்றோம்.

மனைவி
க. தங்கமுத்துவும்
குடும்பத்தினரும்.

திருவி சீமா,
வட—அல்வாய்.

[சி/7953]

## தரக்கட்டுப்பாட்டுக்கு உட்படாத மருந்துவகை குடாநாட்டில் விற்பனை

யாழ்ப்பாணம், ஜூன் 23

மருந்து அதிகார சபையின் தரக்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படாத மருந்து வகைகள் யாழ்ப்பாணத்தில் தாராளமாக விற்பனை செய்யப்படுவதாக சுகாதார திணைக்களம் எச்சரிக்கை செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும்பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற இடங்களில் குறிப்பிட்ட மருந்துவகைகள் விற்பனைக்குத் தயாராகஇருந்த போது கண்டு பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றுசுகாதார திணைக்கள உணவு மருந்து பரிசோதகர் ரி.மகாதேவன் தெரிவித்தார்.

நோவுக்குப் பூசப்படும் வின்ரோஜென் (Wintogeno) மற்றும் சொறி, கடி நோக்கு பூசப்படும் நியுமற்றசைன் (Newmatazine) போன்ற மருந்து வகைகளே அதிகாரசபையின்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப் படாமல் யாழ்ப்பாணத்தில் விற்பனையாகின்றன என்று கூறப்படுகிறது.

தரம் குறைந்ததாகத் தயாரிக்கப்படும் இந்த மருந்து வகைகள் கொழும்பில் கள்ளச் சந்தையில் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ—5)

## அடிக்கல் நடும் வைபவம்

கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலில் புதிய சண்டேஸ்வரர் ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த புதன் கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது.

(இ—30)

## விளையாட்டு விழா

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் யாழ். இராமநாதன் வீதி ஞானக் குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை ஆசிரியர் செல்வி உமாபதி கல்யாணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் திருமதி ஞா. பவானி கலந்து கொள்ளவுள்ளார்.

(இ—5)

## விற்பனைக்கு

டைனமோ 3 K. V குளிர்சாதனப் பெட்டிக்குரிய
காஸ்சிலிண்டர் மற்றும் யூனிற்செற் வகைகள்,
கால் மிதிவகைகள், பிளாஸ்ரிக் தும்புத்தடி, கயிறுவகைகள்,
கோழித்தீன், மாட்டுத்தீன் வகைகள்
விற்பனைக்கு உண்டு

**நாதன் களஞ்சியம்**
இல. 213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. 2916

[66743]

## யாழ். ஹற்றன் நாஷனல் வங்கியின்

ஆதரவில்

**யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம்**

நடத்திய பாடசாலைகளுக்கிடையிலான

**சதுரங்கச் சுற்றுப் போட்டியில்**

முதலாம் இடத்தைப் பெற்ற
மகாஜனக் கல்லூரியின்
16 வயதின் கீழ் ஆண்கள் அணியையும்
16 வயதின் கீழ் பெண்கள் அணியையும்
16 வயதின் மேல் பெண்கள் அணியையும்

இரண்டாம் இடத்தைப் பெற்ற
மகாஜனக் கல்லூரியின்
16 வயதின் மேல் ஆண்கள் அணியையும்
மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள்
மகாஜனக் கல்லூரி

(66800)

உ

சாவகச்சேரி — கிராம்புவில்

## அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகாகும்பாபிஷேகம்

கிரியாரம்பம்: கலியுகம் 5101 பிரமாதி வருடம் ஆனி 6 ஆம் நாள் (20-06-99) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

எண்ணெய்க்காப்பு: ஆனி 10 ஆம் நாள் (24-06-99) வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை

மகாகும்பாபிஷேகம்: ஆனி 11 ஆம் நாள் (25-06-99) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் 10.58 மணி வரை

மகாகும்பாபிஷேகக் கிரியைகள் யாவும் ஆலய பிரதம குருக்கள்
கிரியாகானகலாமணி
வேதாகமஜோதி சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் (மட்டுவில்)
தலைமையில் நடைபெறும்.

சகலரும் வருக! முருகன் அருள் பெறுக.

ஆலய தர்மகர்த்தா சபையினர்

விளம்பர அன்பளிப்பு:

**சிவா பல் பொருள் வாணிபம்**
டச் றோட், சாவகச்சேரி.

**பிள்ளையார் களஞ்சியம்**
விவசாய உள்ளீடு விற்பனையாளர்,
சாவகச்சேரி.

**ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம்**
டச்சு வீதி, சாவகச்சேரி.

**சிவகாமி தொலைத் தொடர்பு சேவை**
டச்சு வீதி, சாவகச்சேரி.
T.P.No. 070-212369
T.P.No. 0094-70-21236

**வண்ணக் காலணிப் பூங்கா**
கண்டி வீதி, சாவகச்சேரி.

**N.K.S. அரிசி ஆலை**
மருதடி மேற்கு வீதி, சாவகச்சேரி.

**விக்கினேஸ்வரா அரிசி ஆலை**
மருதடி மேற்கு வீதி, சாவகச்சேரி

**ஸ்ரீவிக்கினேஸ்வரா களஞ்சியம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

**ஸ்ரீ முருகன் களஞ்சியம்**
முருகன் கோயிலடி, சாவகச்சேரி
இணைப்பு: இந்து இளைஞர் பேரவை

(66791)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சகானா தொலைத்தொடர்பு

இரவு பகல் சேவை
வியாபாரி மூலை இன்பர்சிட்டி,
பிள்ளையார் கோயிலடி (முன்பாக)
பருத்தித்துறை.

**19 - 06 - 1999 முதல்**

எமது சேவையை ஆரம்பித்துள்ளோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தொலைபேசி இலக்கம்:
உள்நாடு - 070 - 212501
வெளிநாடு - 0094 - 70 - 212501

"ஆனந்தவாசா"
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.
(66793)

## புறுக்மன் ஈஸ்ட்

பாண் உற்பத்திக்கு பெல்ஜியத்தில் இருந்து தருவிக்கப்பட்ட மிகத் தரமான ஈஸ்ட்
ஒரு கேஸ் ஈஸ்ட் (450 கிராம்×20) 2,750/-
அத்துடன்
கைக்கோ, மாஜா, பிகைவ்
நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். ஜெ. பி. ரேட் ஏஜென்சி**
**S. J. B. Trade Agency**

## செறிஸ் பிஸ்கெட்

செறிஸ் (Cherish) பிஸ்கெட் கம்பனியின்
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்:
**எஸ். ஜெ. பி. ரேட் ஏஜென்சி**
39, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
பக்ஸ் (FAX) 012549
(66809)

## உதைபந்தாட்ட அரை இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23
வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்றும் நாளை மறுதினமும் நடைபெறவிருக்கின்றன.

அரை இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ இன்று—வதிரிடயமன்ஸ் வி. க அணி எதிர் ஊரெழு றோயல் வி.க. அணி.

★ வெள்ளி—குருநகர் பாடுமீன் வி. க. அணி எதிர் உரும்பிராய் சென் மைக்கல் வி.க. அணி- [இ-3]

## சடலம் ஒப்படைப்பு

மானிப்பாய் தெற்குப் பகுதியில் பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற பிரேதவிசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

செல்வராஜன் பிரதாபன் (வயது 24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டிருந்தார். (ஐ-15-90)

## பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை:
க. பொ. த. சாதாரணதரம் அல்லது மேல்

தபாலில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

பாலர் ஆசிரியர்சங்கம்
கொக்குவில்.
[66481]

## பதில் அதிபர்கள் கவனத்துக்கு

யாழ். மாவட்ட 5 கல்வி வலயப் பாடசாலைகளில் பதில் கடமை புரியும் அதிபர்களாக இருப்பவர்களை நிரந்தர அதிபர்கள் சேவையில் இணைப்பது தொடர்பான கூட்டம்
**26—06—1999 சனிக்கிழமை காலை 10 மணிக்கு**
**யாழ். மத்திய கல்லூரியில்**
நடைபெறவிருப்பதால் பதில் அதிபர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

தலைவர்
**தீவக - பதில் அதிபர்கள் சங்கம்.**
(66766)

## In Treasured Memory OF Dr. K. Arulampalam [R.M.P]



CALLED TO REST 23 - 06 - 1998

BEYOND OUR SIGHT
BEYOND OUR TOUCH
BUT NOT BEYOND OUR LOVE and PRAYER

Sadly Missed & Fondly Remembered by
Wife, Children, In - Laws,
Grand Children.

"BETHEL"
Viyaparimoolai
Point Pedro.
(66781)


### பணி வாழ்வை நிறைவு செய்து ஓய்வு பெற்றுள்ள

# உயர்திரு கா. பரநிருபசிங்கம்

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
(பனை தென்னை வளம்)

### அவர்களை

# பாராட்டுகின்றோம்



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுத் துறையின் இருபத்தேழு ஆண்டு கால வளர்ச்சிப் பாதையில் இரண்டரை ஆண்டுகள் இப்பிரிவின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பண்பட்ட சேவை நல்கிய, மனித மாண்புகளால் நிறையப் பெற்ற ஒரு பண்பாளரை இக்கூட்டுறவுச் சமூகம் இன்றைய நாளிலே இதமார கௌரவிப்பதில் பெருமகிழ்வெய்துகின்றது.

மிகக் கடினமான உடல் உழைப்பாளிகளாகிய இக் கூட்டுறவாளர்கள் இக் கூட்டுறவுத் துறைக்கூடாக தம் வாழ்வை நகர்த்தவும் இச்சமூகத்தை உயர்த்தவும் அரும்பாடுபட்டு வருகின்றனர். பல்லாயிரக்கணக்கானோரின் ஜீவனோபாயத்தோடு ஒன்றியுள்ள இத்தொழிற்துறை சமூக, அரசியல் பின்னணிகளின் தாக்கங்களுக்கும் ஈடுகொடுத்து இன்றுமட்டாக நிலைத்து நிற்பதில் கூட்டுறவுத் திணைக்களத்தின் பங்கும் பணியும் மிகவும் காத்திரமானது.

பலம் பொருந்திய, பாரிய கூட்டுறவு நிறுவனங்களாக எழுச்சி பெற்று நிற்கின்ற இத்துறை எதிர்கொண்ட சவால்களுக்கு முகம் கொடுப்பதிலும் கட்டமைப்புக்கான உத்திகளைத் துல்லியமாக முன்னெடுப்பதிலும் ஆக்கப் பணிகளை துணிந்து அறிமுகப்படுத்தியதிலும், முனைப்போடு பங்காற்றிய இத்துறைசார்ந்த அரும்பெரும் சேவையாளர்களை இக்கூட்டுறவுச் சமூகம் நன்றியோடு நினைவிருத்தியுள்ளது.

பாரிய இடப்பெயர்வு, இதனோடு கூடிய பலவித இழப்புக்கள் சூழ்ந்த பின்னணியில் 1997ஆம் ஆண்டு தை மாதம் இப்பனை தென்னை வளப் பிரிவின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக உயர்திரு. கா. பரநிருபசிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார்கள். கூட்டுறவுத் திணைக்களத்தில் பல்வேறுபட்ட பணி நிலைகளில் மூன்று தசாப்தங்களுக்கு மேலான அனுபவ ஆற்றலோடு, இத்துறைக்குள் பிரவேசித்து கண்ணியமும் தூய்மையும் மிளிர தம் பணியை நிறைவேற்றி எம் மத்தியில் இருந்து அவர் ஓய்வுபெறுவது ஒரு பசுமையான நினைவாக எம்மை நிறைவுபடுத்துகின்றது. ஈடுபாட்டுடன் உழைத்த ஒவ்வொருவரையும் அன்போடு நேசித்து, தம் இதயத்தளவில் அனைவரையும் நெருக்கமாக்கி, ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ நிலைக்கு அனைவரும் உயர்வதில் உளமார மகிழ்ந்து உன்னத மனப்பாங்குடன் அவர் ஆற்றிய சேவைகள் என்றும் போற்றுதற்குரியவை. களங்கமற்றதும் எளிமை மிக்கதுமான அவரது ஈதை அனைவருக்கும் முன்னுதாரணமானவையாகும்.

சுய உணர்வோடும் ஆற்றலோடும் இந்த நிறுவனங்கள் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும். செயல்களில் உண்மையும், நேர்மையும் மிளிர வேண்டும். பனை தென்னை சார்ந்த முழுவளங்களையும் ஆக்கத்திற்குள்ளாக்க வேண்டும். சமூக மட்டத்தில் இந்த நிறுவனங்கள் காத்திரமான பங்கை ஆற்றவேண்டும். இத்தகைய எதிர்பார்ப்புக்கள் நிறைந்த அவர்களின் சிந்தனை வெளிப்பாடு இந்த நிறுவனங்களில் செயல் வடிவம் பெறுவதன் வழியாகவே, நாம் ஒரு சிறந்த கூட்டுறவுச் சமூகமாக எழுச்சி பெற முடியும் என்பதில் நம்பிக்கையுடையோம்.

பலவித பின்னடைவுகளுக்கு மத்தியிலும் கூட, இத்துறை வளர்ந்து செல்லவேண்டிய துறையாகும். நீண்டு நெடுத்து திடமாக வளர்கின்ற பனையும் தென்னையும் இந்த மக்களின் அரும்பெரும் முதுசமாகும். இவற்றைப் போற்றிப் பயன்பெறுவதன் வழியாகவே இந்தச் சமூகம் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்தது. இன்னும் வாழ்ந்து வருகின்றது. இந்தத் தொழில்துறையை மேல்விருத்தி செய்வதும், புதுவழி சமைப்பதும் காலத்தின் தேவைகளாகும்.

இத்தகைய எண்ணங்கள் குவிய, இற்றைவரை அன்புடன் எமை வழி நடத்திய பெரியாருக்கு, ஒருமனத்தோராய் வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றோம். மகிழ்வு, ஆரோக்கியம், அமைதி நிறைந்த அவரின் நல்வாழ்வுக்காக ஆசிக்கின்றோம்.

புகழோடு, பொலிவோடு வாழ ஆண்டவன் அருள்பாலிப்பாராக.

### அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

பருத்தித்துறை பனை தென்னை வள அபி. கூ. சங்கம்
கரவெட்டி ப.தெ.வ.அ.கூ. சங்கம், அச்சுவேலிப.தெ,வ.அ.கூ. சங்கம்
சங்கானை ப.தெ.வ.அ.கூ. சங்கம், தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ. சங்கம்
மானிப்பாய் ப,தெ,வ.அ.கூ. சங்கம், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ,சங்கம், பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்
சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ. சங்கம், கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்
பளை ப.தெ.வ.அ.கூ. சங்கம், கோப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கம்
யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ. சங்கம், அரியாலை ப.தெ.வ.அ.கூ. சங்கம்
ஊர்காவற்றுறை ப.தெ.வ.அ.கூ. சங்கம், வேலணை ப.தெ.வ.அ.கூ. சங்கம்
சித்தவைத்திய கூ. சங்கம், வடமராட்சி ப.தெ,வ.அ.கூ.ச. கொத்தணி
வலிகாமம் ப.தெ.வ,அ.கூ.ச. கொத்தணி,
தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி,
யாழ். ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி.
வடமாகாண தெ.ப.பொ.கூ.ச. சமாசம்.
(சி/7960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வாக்கு வாங்கும் நோக்கம்!

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் குறித்து ஒவ்வொரு தரப்பினரும் தத்தமது நோக்கங்களை முன்னிறுத்தி இப்போது விமர்சிக்கிறார்கள்; காரணம் கற்பிக்கிறார்கள். அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் எதிர்வளமான கருத்து ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

தென்மாகாண சபைத் தேர்தலில் ஏனைய இடங்களைவிட மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே. வி. பிக்கு) அதிக ஆசனங்கள் கிடைத்துள்ளன. அரசின் தீர்வுத் திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி ஆதரிக்கவில்லை. ஆகையால் அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை தென்பகுதி மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதே அர்த்தம் — என்று முன்னாள் ஐ. தே. க அமைச்சர் லொக்கு பண்டாரா கூறியுள்ளார்.

அரசாங்கம் தயாரித்துள்ள — ஜூலை அல்லது ஒகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சட்ட மூலமாகச் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் — தீர்வுப் பொதி, தமிழர் பிரச்சினைகளைத்தீர்ப்பதில் எந்த அளவுக்கு முன்னேற்றகரமானது என்பது குறித்து கருத்துக் கூறும் நிலையில் தமிழர்கள் இல்லை. காரணம் புதிய சட்ட மூலத்தின் சரியான வடிவம் என்ன என்பது அவர்களுக்குத் தெரியாது!

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ தீர்வுப் பொதியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பிராந்திய சபைகள் முறையை எதிர்க்கிறது' நாட்டின் ஒற்றையாட்சி வடிவம் மாற்றப்படக்கூடாது என்று பேயாட்டம் போடுகிறது. அரசாங்கம் ஆரம்பத்தில் சமர்ப்பித்த தீர்வுப் பொதியின் முக்கிய கருவம்சமே பிராந்திய சபைகளின் ஒன்றியமாக நாட்டின் நிர்வாக முறையை மாற்றுவது என்பதேயாகும். அதனை ஐ.தே. கட்சி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆதரிக்கவில்லை.

இவ்வாறிருக்க ஐ. தே. கட்சி அரசில் அமைச்சராகப் பணிபுரிந்த லொக்குபண்டாராதென் மாகாண மக்கள் தீர்வுத் திட்டத்தை ஆதரிக்கவில்லை என்று காரணம் காட்டுவதும் அர்த்தம் கற்பிப்பதும் தீர்வுப் பொதிக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் உள்நோக்கம் கொண்டதாகவே தொனிக்கிறது.

தீர்வுப்பொதி ஒரு புறமிருக்க, தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கி போருக்கு முடிவுகட்டி, இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டும் என்ற மனப்போக்கு சிங்கள மக்களிடம் இப்போது மெதுவாகத் தோன்றி வருகிறது. போரினால் தமிழர்கள் மட்டுமன்றிச் சிங்களவர்களும் பாதிப்புறும் நிலை வந்ததாலேயே தென்னிலங்கை மக்களிடம் மனமாற்றம் வந்தது எனலாம்.

எப்படியோ, இந்தப் புதிய நிலை சிங்களப் பேரினவாதிகளை வாளாகக் குத்தியது. புதிய போக்கைச் சகித்துக் கொள்ளமுடியாத பேரினவாதம் ''வீரவிதாஹன'' பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய அமைப்பு, சிங்கள ஆணைக்குழுவின் மாற்று அரசமைப்புச் சட்டம் என்றெல்லாம் பல வடிவங்களை எடுத்துள்ளது.

தமிழர்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படக் கூடாது, நீதியுடன் கூடிய சமாதானத்துக்கு இடங்கொடுக்கலாகாது, அமைதி உருவாக அனுமதிக் க்கூடாது என்பதே இவற்றின் இலக்குகளாகும்.

முன்னாள் அமைச்சர் லொக்கு பண்டாரவின் (மாகாண சபைத் தேர்தல் முடிவுக்கு) அர்த்தம் கற்பிக்கும் செயலும் முன்னர் கூறப்பட்டது போன்ற ஒரு வடிவமே எனக் கருதலாம். தேர்தல் வருவதால் எப்படியாவது, எதையாவது கூறி வாக்கு வாங்கும் நோக்கம் இது!

## குடாநாட்டில் 23 கிணறுகளை அமைக்க 'யுனிசெவ்' முடிவு

### 245 கிணறுகள் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் 23 புதிய கிணறுகள் அமைக்கப்பட உள்ளன. 245 கிணறுகள் திருத்தப்படும்.

புதிய கிணறு ஒன்றை அமைப்பதற்கு 40 ஆயிரம் ரூபாவும் கிணறு ஒன்றைத் திருத்துவதற்கு 5 ஆயிரம் ரூபாவும் மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை 580 மலசல கூடங்களைப் புதிதாக அமைப்பதற்கும் 515 மலசல கூடங்களைத் திருத்துவதற்கும் யுனிசெவ் தீர்மானித்துள்ளது.

புதிதாக அமைக்கும் ஒரு மலசல கூடத்துக்கு 12 ஆயிரம் ரூபாவும், மலசல கூடத்தைத் திருத்துவதற்கு 4 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் இந்த வேலைகளைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமது பகுதிகளில் செய்ய வேண்டிய இத்தகைய திட்டங்கள் பற்றி யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு மலசல கூடம் அமைக்கவும் திருத்தம் செய்வதற்கும் யுனிசெவ் தீர்மானித்துள்ளது.

அறுபது பாடசாலைகளில் இந்தத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

(இ-5-ரி)

## வந்த மறுநாளே திரும்பிச் சென்ற வைத்திய அதிகாரி

தென்மராட்சி, ஜூன் 23

பளை ஆஸ்பத்திரிக்கு பொறுப்பதிகாரியாக கடந்த முதலாம் திகதி முதல் நியமனம் பெற்று வந்த தென் இலங்கையைச் சேர்ந்த வைத்திய அதிகாரி ஒருவர் வந்த மறுநாளே திரும்பிச் சென்று விட்டார் என்று தெரியவருகிறது. (இ-117)

## கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் 'உதயன்' நிறுவனத்தின் ஆதரவுடன் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு-:

★ பி.ப 4மணி — இந்து இளைஞர் வி.க அணி எதிர் கோப்பாய் ஐக்கிய வி.க அணி

★ பி.ப 5மணி— விக்னேஸ்வரா வி.க அணி எதிர் சிவசக்தி வி.க அணி (க)

## 'லேபல்' இன்றி மருந்து வகைகள்

நெல்லியடி, ஜூன் 23

வடமராட்சிப் பகுதியில் உள்ள தனியார் மருந்துக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்படாத நிலையில் லேபல் இன்றி காணப்பட்ட மருந்து வகைகளை யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் கே. மகாதேவா கைப்பற்றினார்.

நேற்று முன்தினம் காலை இப்பரிசோதனை மந்திகை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இடம் பெற்றது.

[இ-109]

## மனைப் பொருளியல் பற்றிய அறிவுப் போட்டி

வலிகாமம் தெற்கு, ஜூன் 23

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே மனைப்பொருளியல் பற்றிய அறிவுப் போட்டி நடைபெற உள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் தரம் 10, 11 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களில் ஐந்துபேர் பங்கு பற்ற முடியும்.

பிரிவு மட்டத்திலான போட்டிகள் எழுத்துப் பரீட்சை மூலமாக நடைபெறும்.

இப்பரீட்சையில் தெரிவு செய்யப்படும் முதல் ஐந்து மாணவர்களும் வலய மட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெறுவர்.

எழுத்துப் பரீட்சைகள் ஜூலை மாதம் 11 ஆம் திகதி பின்வரும் இடங்களில் நடைபெறும்.

பிரிவு ஒன்று- சண்டிலிப்பாய் சைவப்பிரகாச மகாவித்தியாலயம்.

பிரிவு இரண்டு – மானிப்பாய் மகளிர் கல்லூரி.

பிரிவுமூன்று-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

பிரிவு ரீதியன போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக வலிகாமம் கல்வித் திணைக்கள அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கோரப்பட்டுள்ளனர்.

(இ-152)

## ஆங்கில தினப் போட்டிகள்

நெடுந்தீவு, ஜூன் 23

நெடுந்தீவு பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் எதிர் வரும் சனிக்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (இ-111)

## ஆயிரம் ரூபா கள்ள நோட்டு

கொழும்பு, ஜூன் 23

அனுராதபுரத்தில் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

பொலன்னறுவை மாவட்ட மக்கள் வங்கிக் கிளையில் இருந்து அனுராதபுரம் மத்திய வங்கிக் கிளையில் வைப்பிலிடுவதற்குக் கொண்டுசெல்லப்பட்டபணத்தில் இரு ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

(இ-6)

## குடிசை தீக்கிரை

புன்னாலைக்கட்டுவன், ஜூன் 23

புன்னாலைக் கட்டுவன் தெற்கில் குடிசை ஒன்று எரிந்து தீக்கிரையானது

அன்றைய தினம் வீட்டு வளவில் முருங்கை மரத்தில் இருந்த மயிர் கொட்டிகளை காய்ந்த ஓலை கொண்டு எரித்த போது குடிசை தீப் பிடித்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-133)

## அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 23

1996 ஆம் ஆண்டு காணாமற் போய் மரணமடைந்து விட்டதாக அண்மையில் உறுதி செய்யப்பட்ட நல்லூர் வாசியான மகேந்திரம் பாபுவுக்கு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும், கைது செய்யப்பட்டோர் காணாமற் போனோர் சங்கமும் அஞ்சலி தெரிவிக்கவுள்ளன.

இன்று காலை 8 மணிக்கு மேற்படி மரணமானவரின் வீட்டுக்கு நேரில் சென்று இரு அமைப்பு உறுப்பினர்களும் தமது அஞ்சலியைத் தெரிவிப்பார்கள். [இ-5]

## அரச அலுவலருக்கான காப்புறுதித் திட்டத்தில் ஆசிரியர்களும் அக்கறை கொள்ள வேண்டும்

அரசாங்க நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், சகல மாகாண சபைகளின் தலைமைச் செயலர்களுக்கும் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் 31-01-1997 ஆம் திகதியிட்டு அனுப்பிய05/97 இலக்கம்கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் அரச அலுவலர்களுக்கான ''அக்ரஹார' என்ற காப்புறுதித் திட்டம் 01-01-1997 தொடக்கம் செயற்படும் எனத் தெரிவித்திருந்தார்.

18 வயது தொடக்கம் 60 வயது வரையான வயதினை உடையவர்களான, பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட ஓய்வூதிய உரித்துடைய அரச சேவை, மாகாண சேவையிலுள்ள உத்தியோகத்தர் அனைவரும் இக் காப்புறுதித் திட்டத்தில் சேரலாம். இவர்கள் கட்டாயம் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் சேரவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மருந்துவக்காப்புறுதித் திட்டம், தனிநபர் திடீர் விபத்துக் காப்புறுதித்திட்டம், கடன் காப்புறுதித்திட்டம்




என மூன்று பிரிவுகளை இந்த ''அக்ரஹார'' காப்புறுதித் திட்டம் உள்ளடக்கியுள்ளது. இது அரச அலுவலர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இதனை உரியமுறையில் பயன்படுத்திப் பயனடைய வேண்டும்.

இந்தத் திட்டம் அமுலுக்கு வந்து, இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால், பல அரசபணியாளர்கள்— குறிப்பாக அரச பாடசாலை ஆசிரியர்களுள் பலர்— இன்னமும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறாது இருக்கின்றனர்.

அரச பணியிலும் தொழிற் சங்கப் பணியிலும் நான் ஈடுபட்ட காலத்தில், மருத்துவக் காப்புறுதி, விபத்துக் காப்புறுதி ஆகியவை அரச அலுவலர்களுக்கு அரசின் செலவில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பல தடவைகள் குரல் எழுப்பிய போதும், அக்கால அரசுகளினால் இந்த கோரிக்கைகள் நிறைவேற்றப் படவில்லை. ஆனால் தற்போதைய அரசு, இந்தக் கோரிக்கைகளுக்கு மேலதிகமாகக் கடன் காப்புறுதி என்ற மேலதிக காப்புறுதியையும் சேர்த்து வழங்க முன்வந்தது விதந்து பாராட்ட வேண்டியதாகும். நான் அரச சேவையிலிருந்து, ஓய்வு பெற்றுவிட்டபடியால் இந்தக் காப்புறுதித் திட்டத்தின் பலனை அனுபவிக்கும்

### ச. ஆ. கோபாலமூர்த்தி

வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. அரச பணியிலுள்ள அனைவரும் இந்தக் காப்புறுதித் திட்டத்தின் பயனைப் பெற வேண்டும் என்பதற்காகவே இதனை எழுதுகிறேன்.

மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான முழுச் செலவும் அரசாங்கத்தினால் ஏற்கப்படும் என 05/97 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தித் திணைக்களத் தலைவருக்கு அனுப்பி இத்திட்டத்தில் சேர வேண்டும் எனவும்கூறப்பட்டுள்ளது.

ஏதெனுமொரு நோய் அல்லது விபத்து ஏற்பட்டால், அது ஏற்பட்டு 14 நாள்களுக்குள் திணைக்களத் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். மருத்துவ ஆலோசனை, மருந்துவசெலவு தொடர்பான பற்றுச் சீட்டுகள் அனைத்தையும் இணைத்து இச்செலவுகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஒரு சந்தர்ப்பத்துக்கு 40,000 ரூபாவுக்கு மேற்படாத வகையில், ஒரு வருடத்துக்கு 50,000ரூபா வே ஆகக் கூடிய தொகை என்ற வகையில் மருத்துவச் செலவு பெறலாம். என இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிநபர் விபத்து பாதுகாப்பளிப்புக் காப்புறுதி, கடன் உத்தரவாதக் காப்புறுதி என்பன அரச அலுவலர்களின் விருப்பத்திற்குரியன. அவர்கள் விரும்பினால், இக் காப்புறுதித் திட்டங்களிலும் சேரலாம். இதற்கு மாதம்ஒன்றிற்கு 11ரூபா சந்தாப்பணம் செலுத்த வேண்டும் இச்சந்தாப் பணத்தைச் சம்பளத்திலிருந்து எடுத்து காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்புவதற்குத் திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுப்பர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

★

## நாளை

**ஆனி 10**

வியாழக்கிழமை

திதி: ஏகாதசி

முன் இரவு 8.21 வரை

நட்சத்திரம்: சுவாதி

முன் இரவு: 7.03 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 7.25 — 8.55

ராகுகாலம்: 1.25 — 2.55

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

இல்லாதவனுக்கு ஒரே கவலை என்றால் இருப்பவனுக்கு நூறு கவலை

— கன்னடப் பழமொழி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேலும் ஐந்து ஜெனரேட்டர்கள் வரும்; வருட இறுதிக்குள் பிரிட்டன் வழங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

குடாநாட்டுக்கு மேலும் ஐந்து ஜெனரேட்டர்களை இந்த வருட இறுதிக்குள் பிரிட்டிஷ் அரசு வழங்க இருக்கின்றது.

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் துணை ஸ்தானிகர் மார்டீன் உறில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு மின்சார வசதி கிடைப்பதற்காக எட்டு ஜெனரேட்டர்களை ஏற்கனவே அனுப்பியிருந்தோம். அவை நல்லமுறையில் இயங்குகின்றன.

மேலும் ஐந்து ஜெனரேட்டர்களைக் கொள்வனவு செய்ய நிதி வழங்க பிரிட்டன் ஒத்துக்கொண்டுள்ளது. இந்த வருட இறுதிக்குள் அவை இலங்கை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஜெனரேட்டர்களை தொண்டமனாறு, பொலிகண்டி, மாதகல், மட்டுவில், எழுதுமட்டுவாழ் ஆகிய இடங்களில் பொருத்த ஏற்பாடாகியுள்ளது. இதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது — என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## கொழும்புக்கு இறால் கருவாடு

குருநகர், ஜூன் 23

குருநகர் மீனவர்களால் பிடிக்கப்பட்டு காயவைக்கப்பட்ட சுமார் 3 ஆயிரம்கிலோ இறால் 42 மூடைகளில் பொதி செய்யப்பட்டு 'மகோ' கப்பல் மூலம் அண்மையில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

குருநகர் கடலுணவு ஏற்றுமதியாளர் அமைப்பு கடந்த 16 ஆம் திகதி இந்த இறால் மூடைகளை கொழும்புக்கு அனுப்பும் பொறுப்பை ஏற்று அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-51)

### பிரிகேடியருக்கு விடுக்கப்பட்ட

## ஓய்வு பெறும் உத்தரவை இடைநிறுத்த உத்தரவு

கொழும்பு, ஜூன் 23

இராணுவத்தில் இருந்து பிரிகேடியர் ஒருவரைக் கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யும் நடவடிக்கையை தடை செய்யும் இடைக்கால உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்றம் விடுத்துள்ளது.

எம்பிலிப்பிட்டிய படுகொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட பிரிகேடியர் லியனகே தாக்கல் செய்திருந்த மனுமீதே நீதிமன்றம் இந்த இடைக்காலத்தடை உத்தரவைப் பிறப்பித்தது.

பிரிகேடியர் தனது மனுவில் மேஜர் ஜெனரல் பதவிக்கு தன்னைத்தரம் உயர்த்தாமல் ஓய்வு பெறச் செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் —

இதனால் தனது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்றும் —

அதற்கு நஷ்டஈடாக 50 லட்சம் ரூபா வழங்கப்பட வேண்டும் எனவும் — தெரிவித்திருந்தார்.

மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் ரஞ்சித் வீரரத்ன, டி. பி. எஸ். குணசேகர, லக்ஸ்மன் வீரசேகர ஆகியோர் பிரிகேடியரின் பதவி உயர்வுடன் சம்பந்தப்பட்ட சகல இரகசிய ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டனர்.

பிரிகேடியரின் ஓய்வை உடனடியாக வாபஸ் பெறுமாறும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

(இ-6)

## புகைப்படங்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு

துரையப்பா விளையாட்டரங்க மனிதப் புதைகுழி அகழ்வு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட பதினெட்டுப் புகைப்படங்கள் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் யாழ். பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்டன.

இந்தப் புகைப்படங்களையும் மற்றும் துரையப்பா புதைகுழியில் எடுக்கப்பட்ட தடயப் பொருள்களையும் ஆய்வுப் பரிசோதனைக்காக கொழும்பிலுள்ள சட்ட வைத்திய ஆலோசகர் டாக்டர் எல். பி. எல். அல்விஸுக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் யாழ். சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார். (ஐ-5-ரி)

## பரீட்சையில் சித்திபெற்ற 48 மாணவருக்குப் பாராட்டு

குருநகர், ஜூன் 23

பொதுப் பரீட்சைகளில் சித்தியடைந்த குருநகரைச் சேர்ந்த 48 மாணவர்கள் குருநகர் சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் நால்வரும். 1998 டிசெம்பரில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்கள் 38 பேரும்,

5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவர்கள் ஆறு பேரும் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

குருநகர் கலை அரங்கில் குருநகர் சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் நடத்தப்பட்ட இந்த கௌரவிப்பு வைபவத்தில் முதன்மை விருந்தினராக குருநகர் பங்குத் தந்தை வண. பிதா ஜி. பொனிப்பஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக குருநகர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எஸ் தங்கராசா, குருநகர் புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய அதிபர் அருட்செல்வி மேரி யுவேரியாவும் கலந்து கொண்டார்கள். (இ-51)

## பிரிவுபசார விழா

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு உதவி ஆணையாளர் க. பரநிருபசிங்கம் பதவியில் இருந்து ஓய்வு பெற்று சென்றதை முன்னிட்டு நடத்தும் பிரிவுபசார விழா இன்று புதன்கிழமை யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும்.

மாவட்டத்தில்உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்து இந்த பிரிவுபசார விழாவை நடத்தவுள்ளன.

பிரிவுபசார விழாவில் ஓய்வு பெற்றுள்ள ஆணையாளருக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்படும்.


## இலங்கை மின்சார சபை

## மின் தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் காங்கேசன்துறை 33 கே. வி. ஏ. மின் மார்க்கத்தில் முக்கிய சில திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 26- - 06 - 1999 ஆம் திகதி சனிக்கிழமை காலை 08 மணி தொடக்கம் மாலை 05 மணி வரைக்கும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

''இலங்கை மின்சார சபை சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''

– இலங்கை மின்சார சபை

மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

(சி/7976)


### வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் நடந்த

## தமிழ்மொழித் தினப்போட்டிகளில் முதல் மூன்று இடங்கள் பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு— கிழக்கு மாகாண மட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தமிழ்மொழி எழுத்திலானபோட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன

அவற்றில் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

### எழுத்தாக்கம்

ர. பிரசாந்தி (வவுனியா, சைவப் பிரகாச கனிஷ்ட வித்தி.), தி. கயலினி (யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), சா. நிரோசினி (திருகோணமலை, புனித பிரான்சிஸ் சவேரியார் ம. வி.).

### கட்டுரை ஆக்கம்

★ பிரிவு — 2

ச. பிரியங்கா (வேம்படி மகளிர் கல்லூரி), அ. அருள் ஜெயானந்தன் (மன்னார் புனித ஆனாக் ம. வி.), வைஸ்ணவி மனோகரன் (கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி).

★ பிரிவு — 3

வீ. மீரா (அராலி இந்துக் கல்லூரி), எம். எச். சல்மா ஹான் (கல்முனை முஸ்லிம் மத்திய கல்லூரி, சம்மாந்துறை),

க. தர்மினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

★ பிரிவு — 4

தி. பிரகாஷ் (வயாவிளான் ம. ம. வி.), எம். எம். சிர் யியா (மட்டக்களப்பு மீரா பாலிகா வி.), சி. நிருத்திகா (வேம்படி மகளிர் கல்லூரி).

★ பிரிவு — 5

இ. இராசேஸ்வரி (கல்முனை விபுலானந்தா வி.), சி. தயாளினி(வரணி ம. வி.) ஐ. எம். எப். றியானா ஜெஸ்மின் (கல்முனை மஃமூத் மகளிர் கல்லூரி).

### நாடகப் பிரதியாக்கம்

★ திறந்தபோட்டி

சி. கிருஷ்ணரங்கா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), க. மோகனதாசன் (மட்டக்களப்பு கிராக்குளம் விநாயகர் வி.), ச. அமுதினி (கச்சாய் அ. த. க. பாடசாலை)

### கவிதை ஆக்கம்

★ பிரிவு—4

தி. கோபிநாத் (யாழ். இந்துக்கல்லூரி), ச. மைதிலி (மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), [illegible] நிசாந்தன் (யாழ். கென்றியரசர் கல்லூரி).

★ பிரிவு — 5

த. தர்மேந்திரா(யாழ். இந்துக்கல்லூரி), எம். ஐ. நஜ்பா (மட்டக்களப்பு மீரா பாலிகா வி.), க. சேரலாதன் (மட்டக்களப்பு பழுகாமம் பாரதி வி.).

### சிறுகதை ஆக்கம்

★ பிரிவு — 4

பே. நிஷாகாந்த் (திருகோணமலை, இ. கி. ச கோணேஸ்வரா இந்துக்கல்லூரி), மு.ஆ வெ.பாத்திமா சவீக்கா (அக்கரைப்பற்று ஆயிசா பாலிகா ம.வி.), ஏ. பீ. பலீலா (ஓட்டமாவடி பாபா ம.வி.).

★ பிரிவு — 5

த. பிரபாகரன்(யாழ். விக்ரோறியா கல்லூரி), க.சுஜீவா (வரணி ம.வி).

கவிதை ஆக்கம் பிரிவு – 5 இல் இருவர் 3 ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர். அவர்கள் விவரம் வருமாறு:–

இருதயதாசன்(கிளிநொச்சி மத்திய கல்லூரி), எம். பாரதி [illegible] விவேகானந்தா ம.ம.வி.) (இ-[illegible])


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பொதுச் சுகாதார பரிசோதகர் தரம் 11 (ஆண்) பதவிக்காக விண்ணப்பங்கள் 1999 – 07 – 16 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

**சம்பளம்**

— ரூபா 5780—10 × 85 —7 × 100 — 7330/– மாதமொன்றுக்கு.

**தகைமைகள்**

— சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரீட்சையில்சித்தியடைந்து தகைமை பெற்றதிலிருந்து குறைந்த பட்சம் மூன்றாண்டு அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது**

— 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு**

— உளச்சார்பறிதேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றின் மூலம்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் அல்லது இப்பல்கலைக் கழகத்தின் சிறாப்பரின் முகப்பு மேசையில் 20/– ரூபாவைச் செலுத்தி பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெறக் கூடிய விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். படிவங்களையும், விவரங்களையும் தபால் மூலம் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/– ரூபா பெறுமதியான காசுக் கட்டளை / தபால் கட்டளை ஒன்றை சுயமுகவரியிட்டு 3.50 முத்திரை ஒட்டப்பட்ட 23 × 10 ச. மீ. அளவுடைய கடித உறை ஒன்றுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசகூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது நியமன அதிகாரி மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். சேவையிலுள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதன்று. (ஓய்வு பெற்ற அலுவலர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஒப்படை (ஒப்பந்த) அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்துவதற்காகக் கவனிக்கப்படும். தெரிவு நேர்முகப்பரீட்சை மூலம் செய்யப்படும்.)

முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1999—06—10.

[சி/7959]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையார்வன் K. இராயப்பு
எழுதிய

**செயல்முறை கணிப்பொறி**
**Practicals in Computer**

ஈழத்தின் முதலாவது கணிப்பொறி நூல்
வெளியீடு: யா/சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபம்
காலம்: 28 – 06 – 99 திங்கள் காலை 10-00 மணி

NEO CULTURAL COUNCIL 21st
(66820)


## கண்ணீர் அஞ்சலி



### முருகேசு வல்லிபுரம்
(வல்லிக்கோன்)

17-06-99 இல் காலமான முருகேசு வல்லிபுரம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கை யாக்குகின்றோம்.

(66816) உடுவில் மக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு வல்லிபுரம்
(வல்லிக்கோன்)

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு வல்லிபுரம் (சிமெந்துக் கூட்டுத்தாபன ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்—உடுவில் ஸ்ரார் கிளப் கரப்பந்தாட்ட வீரர்) அவர்கள் 17–06–1999 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் திருமதி கலைவாணி (யாழ். பல்கலைக்கழகம்), கல்யாணி (கனடா), வாசவன் (கணக்காளர், யூனிவேர்சல் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு), மோகன் (மண்ணியல் பரிசோதகர், ஜேர்மனி), ஆதவன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், கே. கே. எஸ்.), உஷாயினி (ஜேர்மனி), தசவரதன் (கனடா), Dr. திருமதி கயல்விழி (விஞ்ஞானபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), குருபரன் (A/L மாணவன், யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் Dr. பொன். இராமநாதன் (சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), சாந்தி (கொழும்பு), கமலாதேவி (ஜேர்மனி), மயில்வாகனம் (கனடா), செல்லத்தம்பி (ஜேர்மனி), சுதர்சனா (கனடா), புவனேஸ்வரி (இணுவில்), அழகேசன் (பொறியியலாளர், சாமுவேல் அன் கம்பனி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23–06–99) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 11–00 மணியளவில் (புதிய நேரம்) தகனக் கிரியைகளுக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

திருமதி கலைவாணி இராமநாதன் (மகள்)
(சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

மானிப்பாய் வீதி,
(உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில்)
உடுவில். (66815)

### வயிரவநாதர் செல்லத்துரை
(பென்சனியர், காணிப்பதிவு கந்தோர், யாழ்ப்பாணம்)

இலக்கம் 13, மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த வ. செல்லத்துரை அவர்கள் நேற்று (22–06–1999) காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரெஜினா பூமணி
(மனைவி)

13, மவுண்கார்மல் வீதி,
யாழ்ப்பாணம். (66824)

# செம்மணிப்புதைகுழி தோண்டும் பணி துரிதமாகமேற்கொள்ளப்படவேண்டும்

## பல்கலை. மாணவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 23

செம்மணி மனித புதைகுழியைத் தோண்டும் பணியை விட்டு விட்டு மேற்கொள்ளாது விரைவாக தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

— மேற்கண்டவாறு ஜனாதிபதியைச் கோரும் தீர்மானம் ஒன்றை யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் கூட்டம் ஒன்றுநேற்றுக்காலை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற சமயம் செம்மணிப் புதைகுழி தோண்டும் பணி தாமதப்படுத்தப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக அங்குஎடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

★ நிபுணர்களின் வருகையிலுள்ள தாமதத்தைக் காட்டியோ அல்லது வேறு எந்தக் காரணத்தைக் காட்டியோ செம்மணி புதைகுழியைத் தோண்டும் பணியைத் தாமதப்படுத்தக் கூடாது. இந்தப் பணியைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ வருகை தரும் நிபுணர்கள் புதைகுழிகளைத் தோண்டும் வரை இங்கு தங்கி நிற்க வசதி செய்தல் வேண்டும்.

★ தோண்டும் பணி தாமதமின்றிநடைபெற வசதியாக மரபணுப்பரிசோதனைக்கு தேவையானஉபகரணங்களை இங்கு தருவிக்க வேண்டும்.

★ பருவகால மழைக்கு முன்பாகஅடையாளம்காணப்பட்ட புதைகுழிகளைத் தோண்ட வேண்டும். அத்துடன் ஏனைய இடங்களில் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் புதைகுழிகளையும் தோண்டுவதன் மூலம் நீண்டகாலமாக இழுபட்டுப்போகும் காணாமற் போனோரின் நிலையினைத் தெளிவுபடுத்த வேண்டும்.

★ காணாமற்போன பல்கலைக்கழக மாணவர்களான குகநேசன், சோமஸ்கந்தன், வசந்தமோகன் ஆகியோரின் நிலையை எமக்கு தெரியப்படுத்த வேண்டும். (உ–3)

## சாய்ப்புச் சட்டத்தை புறக்கணிக்கும் வர்த்தகர்

வலிகாமம்தெற்கு, ஜூன் 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் வணிகர் கழகங்களின் சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு மாறாகவும், அவர்களின் வேண்டுகோளை புறக்கணித்தும் சில வர்த்தகர்கள் நடந்துகொள்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சம்மேளனம் சனிக்கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணிக்கு பின்னரும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொது விடுமுறை தினங்களிலும் முழுநாளும் மூடி தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்கவேண்டும் என தீர்மானம் செய்து வர்த்தகர்களுக்கு ஏற்கனவே அறிவித்திருந்தது.

இத்தீர்மானம், அறிவுறுத்தல்களை பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் பின்பற்றி வருகின்ற போதிலும் சில அவற்றை உதாசீனம் செய்து வருவதாக சம்மேளனத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாம்.

பிரதான வீதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனங்கள் அநேகமாக இந்தவேண்டுகோளை அனுசரித்து வர்த்தக நிலையங்களை மூடி வருகின்றன.

ஆனால் உள்ளூரில் இயங்கி வரும் பல வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்து வியாபாரத்தை மேற்கொண்டு வருவதாகவும்—

ஏனைய வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொருள்களை கூடிய விலைக்கு விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேநீர்க் கடைகள், ஹொட்டல்கள், பழக்கடைகள், மருந்துக்கடைகள் போன்றவை அக்காலங்களில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதை பயன்படுத்தி சில நிறுவனங்கள் மளிகைப் பொருள்களையும் அங்கு வைத்து விற்பனை செய்து வருவதாகவும்—

இன்னும் சில கடைகள் ஒரு கதவை மட்டும் திறந்து வைத்து தந்திரமாக விற்பனையை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-152)

## மல்லாகத்தில் கிரனேட் வீச்சு

வலி. வடக்கு, ஜூன் 23

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு முன்பாக அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் முகாம் அருகே நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் படையினரின் டிராக்டர் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இதில் சிக்கிக் காயமடைந்த தம்பிராசா சீவரத்தினம் (வயது 47), சச்சிதானந்தம் மரியசெல்வி (வயது 27) ஆகியோர் [illegible] ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுத் திரும்பினர். (உ–86–15–13–134)

## வெள்ளைப் பூரான் கடித்து சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

நித்திரையில் இருந்த வேளை வெள்ளைப் பூரான் கடிக்கு இலக்கானதாகக் கூறப்படும் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த மகேந்திரன் கமலவேள் என்ற 5 வயதுச் சிறுவனே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிறு அதிகாலை நித்திரையில் இருந்த சமயம் அவருக்கு வெள்ளைப் பூரான் கடித்ததாகவும் பின்னர் சிறுவன் சத்தி எடுத்ததுடன் வாயால் நுரை தள்ளியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக சிறுவன் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டான். அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட வேளை சிறுவன் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-6-15)

## தமிழர்களுக்கு எதிரான வீடியோ படக்காட்சி

### வீரவிதான காண்பிக்கிறது

கொழும்பு, ஜூன் 23

பெரும்பான்மை மக்களிடையே இனக் குரோதத்தைத் தூண்டும் நோக்கில் சிங்கள வீரவிதான அமைப்பு பல பகுதிகளிலும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான வீடியோப்படங்களைக் காண்பித்து வருகின்றது.

முக்கிய அரசியல் கட்சி ஒன்றின் ஆதரவுடனேயே இந்த வீடியோப்படக்காட்சி காண்பிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மக்களே இந்த நாட்டுக்குரியவர்கள் எனவும் தமிழர்களால் இன்று அவர்களுக்கு ஆபத்து வந்து விட்டதாகவும் இதனை அனுமதிக்கக் கூடாது எனவும் கூறும் படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

விடுதலைப்புலிகளையும் அமைச்சர் தொண்டமானையும் கண்டிக்கும் படங்களும் இதில் அடங்குகின்றன.

கடந்த சில நாள்களுக்கு முன் தெரணியகலைப் பகுதியில் இத்தகைய வீடியோப் படம் ஒன்று காண்பிக்கப்பட்டது என்றும் —

பாடசாலை மாணவர்களுக்கும் இப்படக்காட்சி காண்பிக்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ–க)


**வருடாந்தப் பொதுக் கூட்ட அறிவித்தல்**

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
வெளிக்கள உத்தியோகத்தர் சங்கம்
**யாழ் — கிளை**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29—06—99 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
முன்பு பிரசுரித்தது போல் 28 ஆம் திகதி நடைபெறாது.
கூட்டம் நடைபெறும் இடம்:-
பஸ்டியான் ஹோட்டல்
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அங்கத்தவராக, புதிய விண்ணப்பதாரிகள் தயவு செய்து உடனடியாக செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.
சகல வெளிக்கள ஊழியர்களும் தவறாது கூட்டத்திற்கு வருகைதரவும்.

167/1, கோயில் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். T. P. 2784

ச. சண்முகராசா
கௌரவ செயலாளர்
(66823)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் டாக்டர்கள்வேலை நிறுத்தம்: இடைக் காலத் தடை உத்தரவு

கொழும்பு, ஜூன் 23

தெற்கில் அரச மருத்துவர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தத் தடை எதிர் வரும் 6 ஆம் திகதி வரை நீடிக்கும் மாவட்ட நீதிபதியான ஏ. டபிள்யூ ஏ. கலாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பொதுமக்கள் நலன் கருதி அரசாங்கம் சுகாதார சேவையை அத்தியாவசியச் சேவையாகப் பிரகடனம் செய்துள்ளதால் வைத்தியர்கள் மேற்கொள்ளும் வேலை நிறுத்தம் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரானது என்றும் —

எனவே மக்கள் எதிர் நோக்கும் கஷ்டங்களைக் கவனத்தில் கொண்டு மருத்துவர்களின்வேலை நிறுத்தம் சட்டவிரோதமானது எனப் பிரகடனம் செய்ய வேண்டும் என்றும் —

தெரிவித்து மஹரகமவைச் சேர்ந்த சட்டத் தரணியான சுமேதசேனநாயக்ககொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி வேலைநிறுத்தத்துக்கு எதிராகநேற்று இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த உத்தரவை சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கும் படி நீதிமன்றப் பதிவாளருக்கு பணிப்புரை வழங்கிய நீதிபதி, அரசாங்க மருத்துவ சங்கத்தின் முக்கியஅதிகாரிகளை நீதிமன்றில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார். (உ-3-6)

## துருக்கிக்கு எச்சரிக்கை

லண்டன், ஜூன் 23

குர்டிஷ்தலைவர்அப்துல்லா ஒகலனுக்கு மரண தண்டனை வழங்கப்படுமேயானால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து துருக்கி நீக்கப்படும் என ஐரோப்பியநாடாளுமன்றத் தலைவர் துருக்கிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். (க)

## பாடசாலைத் தினம்

குருநகர், ஜூன் 23

பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.ம. வித்தியாலயத்தின் பாடசாலைத் தினமான இன்று காலை பாஷையூர் பங்குத்தந்தை அருட்திரு சாள்ஸ் கொலின் அடிகள் திருப்பலி ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

இதையடுத்து புதிய கணனி வகுப்புத் திறப்புவிழாவும் கலை நிகழ்ச்சிகளும் பாடசாலையில் இடம்பெறவிருக்கின்றன. (உ-3,51)

## யாழ். ஆஸ்பத்திரியில் பாதுகாப்பு ஊழியரை தாக்கியதாகக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 23

நேற்று யாழ். வைத்தியசாலையில் பணியில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கியதாகக் கூறப்படும் வாடகைக் கார்ச் சாரதி ஒருவரும் அவரது உதவியாளரும் யாழ். பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நோயாளரைப் பார்வையிடும் நேரம் கழிந்த பின்னர் வைத்தியசாலைக்குள் புக முனைந்த இருவரையும் அந்தப்பாதுகாப்பு உத்தியோகத்தர் தடுத்ததாகவும் —

அதையடுத்து அவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் உள்ள பொலீஸ் பிரிவில் ஒப்படைக்கப்பட்ட இருவரும் யாழ். பொலீஸ் நிலையத்தில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தொகுதி தோறும் நூறு வீடுகள் அமைக்கும் பணி விரைவில் ஆரம்பம்

அச்சுவேலி, ஜூன் 23

யாழ். மாவட்டத்தில் ஜனவுதன' திட்டத்தின் கீழ் தொகுதிகள் தோறும் 100வீடுகள் நிறுவப்படவுள்ளன. வீடுகளை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை பூர்த்தி செய்துள்ளது. வேலைத்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

'ஜனவுதன' திட்டத்தின் கீழ் —

கோப்பாய்த் தொகுதியில் இருபாலை கிழக்கு, கோப்பாய் வடக்கு, அச்செழு, அச்செழு மேற்கு ஆகிய இடங்களில் தலா 25 வீடுகளும் —

சாவகச்சேரித் தொகுதியில் பாலாவி, மந்துவில் கிழக்கு ஆகிய இடங்களில் தலா 50 வீடுகளும் —

பருத்தித்துறைத் தொகுதியில் கற்கோவளத்தில் 100வீடுகளும் —

யாழ்ப்பாணத் தொகுதியில் நவாந்துறை கண்ணாபுரத்திலும், குருநகர் றெக்கிளமேசனிலும் தலா 50 வீடுகளும் —

உடுப்பிட்டித் தொகுதியில் இலக்கடியில் 50 வீடுகளும் —

ஊர்காவற்றுறைத் தொகுதியில் மெலிஞ்சி முனை சின்னமடு ஆகிய இடங்களில் தலா 25 வீடுகளும் வேலணை மண்கும்பானில் 50 வீடுகளும் —

உடுவில் தொகுபில் சண்டிலிப்பாயில் கட்டுடை, 40 வீடுகளும் உடுவில் மயிலங்காட்டில் 32 வீடுகளும் புன்னாலைக்கட்டுவனில் 28 வீடுகளும் —

அமைக்கப்படவுள்ளன.

இருபத்தைந்துக்குக் குறையாத வீடுகளைக் கொண்டதாக ஒவ்வொரு குடியிருப்பு நிறுவப்படவிருப்பதாகவும் —

குடியிருப்புக்கான இடம் குடியிருப்பாளர்கள் தெரிவு என்பன பூர்த்தி அடைந்திருப்பதால் ஜூலை மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் —

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் சுப்பிரமணியம் மாசிலாமணி தெரிவித்தார். (உ-11)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களுக்கான — ''நெருக்கடி நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் யுத்தி'' என்ற தலைப்பிலான — கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை அகதிகள்புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கருத்தரங்குக்கு இணையத் தலைவர் அருட்பணியாளர் சி. ஜி-ஜெயக்குமார் தலைமை வகிப்பார். (உ-6)

### மண்டைதீவு..,

(முதலாம் பக்கத் தொடர்)

ராசு மனோ (வயது 25 — மத்தியகிழக்குவீதி, குருநகர்), யோசப் அமலராஜ் (வயது 21 — 2 ஆம் குறுக்குத்தெரு, குருநகர்), தேவதாஸ் இம்மானுவேல் (வயது 20 — புதிய கடற்கரை வீதி, குருநகர்), தேவதாஸ் றொயின்சன் (வயது 24 — மத்திய கிழக்கு வீதி, குருநகர்) ஆகியோரே கைதானவர்கள் ஆவர். (உ-3)

### 25 இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இளைஞர்கள் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வவுனியாவுக்கு கூட்டிச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நகரப் பகுதியில் அதிகரித்துள்ள கைதுகளை அடுத்துப் பெற்றோர் மற்றும் சமய நிறுவனப் பிரமுகர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகவும் —

இளைஞர்கள் சாதாரணமாக நடமாடுவதற்கு அச்சம் கொண்டுள்ளனர் என்றும் —

தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### மிருசுவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கணித்து வைக்கப்பட்ட குண்டு ஒன்றினாலேயே தகர்ந்ததாகக் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாக பலாலி இராணுவத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த ஜெனரேட்டர் மூலம் மிருசுவில் வைத்தியசாலை, மிருசுவில் நகரம் உட்பட சில பகுதிகளுக்கு மின்சாரம்வழங்கப்பட்டிருந்தது.

தற்சமயம் நூறு குடும்பங்களுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால்பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பொதுச் சொத்துக்களைப் புலிகள் நாசப்படுத்தி மக்களைக் கஷ்டப்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களுக்குசிறந்தவாழ்க்கை ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்காக இராணுவத்தினர் செயற்படுவதை தடை செய்யும் நோக்கத்துடன் இயங்கும் புலிகள்,விநியோகத்தைச் சீர்குலைத்து—குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மின் வெளிச்சத்தில் படிப்பதைத் தடைசெய்து—மீண்டும் குப்பிலாம்பு வெளிச்சத்தில் படிப்பை மேற்கொள்ள வைக்கத் திட்டம் வகுத்துள்ளனர்.

அரசாங்கத்தினால்பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது மக்களின் பொறுப்பாகும்— என்றுள்ளது. (உ-3-117)

### சகல...

(முதலாம் பக்கத் தொடர்)

சபை, ஆசிய பவுண்டேசன் மற்றும் அமெரிக்க நிபுணர் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொழும்பில் அரச பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தினர்.

அந்தப் பேச்சுக்கள் தொடர்பாக விளக்குவதற்காக அவர்கள் நேற்றிரவு செய்தியாளர் மாநாடு ஒன்றை ஹோட்டல் ஒபறோயில் நடத்தினர்.

அரசிடம் தெரிவித்த விடயங்கள் குறித்து அவர்கள் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

★ மழைகாலத்துக்கு முன்னர் செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் சகல மனிதப் புதைகுழிகளும் தோண்டி முடிக்கப்பட வேண்டும்.

★ வடக்கு—கிழக்கு மற்றும் தெற்கில் உள்ள சகல புதைகுழிகளும் தோண்டப்பட்டு உண்மை நிலை வெளிக் கொண்டு வரப்படவேண்டும்.

★ செம்மணிப் புதைகுழி தோண்டும் பணியில் இந்த முறை பார்வையாளர்களாகப் பங்குபற்றிய நாம் எதிர்காலத்தில் அந்தப் பணியில் முழுமையாக ஈடுபட விரும்புகிறோம்.

★ இந்தப்பணிக்கு விசேட நிபுணர்கள் தேவைப்படின் கூடுதல் நிபுணர்களை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

★ செம்மணி தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள், நீதிவான் ஆகியோருக்குப் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

★ வடக்கில் காணாமற் போனோரின் பெற்றோரிடம் கூடுதல் தகவல்களைப் பெறுவதுடன் அவர்களுக்குப் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும்.

★ செம்மணிப் புதைகுழி தொடர்பான தகவல்களை வெளியிட்ட சோமரத்னராஜ பக்ஷவுக்கும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசு இந்த விடயத்தில் அக்கறை காட்டுவதற்காக அரசுக்கு எமது பாராட்டைத் தெரிவித்துள்ளோம்.

—இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (உ-3)

### ஈழ மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த மாணவியை யாராவது கடத்திப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விட்டு கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இவர் தொடர்பாக கனடாவில் பத்திரிகைகளிலும், வானொலியிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர் கல்விகற்கும் பாடசாலை மாணவர்கள் ஒருநாள் பாடசாலையை பகிஷ்கரித்து மெழுகுவர்த்தி ஏந்தி பேரணி ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

கனடாவில் வாழும் ஈழத் தமிழர்களிடையே இந்த விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (உ-3)

### ஆயுதம்...

(முதலாம் பக்கத் தொடர்)

தங்களைப் பறித்துக்கொண்டு அந்தக் குழு தப்பிவிட்டது என்றும் —

தெரிவிக்கப்பட்டது. (உ-3-21)

### காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த மாதம் இந்தியாவில் இருந்து மலாக்கா நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் இலங்கைக்கு அப்பால் கடற்பிரதேசத்தில் குறிப்பிட்ட கப்பல் மூழ்கியதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அந்தக் கப்பல் இயந்திரக் கோளாறு காரணமாக இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும்—

அதனை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருக்கலாம் என்றும்—

சர்வதேச கடற்போக்குவரத்துப் பணியகம் கருதுகின்றது.

இந்த கப்பலில் 15 மாலுமிகள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

— இவ்வாறு இலங்கை வானொலி அறிவித்தது. (உ-6)

### பாப்பாமோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்)

போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளது என்றும் —

இந்தப் புதிய பாதையூடாக வந்த ஆயிரம் பேர் மன்னார் வவுனியாப் பகுதிகளுக்குச் சென்றனர் என்றும் —

தெரிவிக்கப்பட்டது. (உ-3-164)


எமது இன்றைய ஓடியோ CD வெளியீடுகள்!

விஜயின் ரசிகர்களுக்காக

- நெஞ்சினிலே
- ஆனந்தம் ஆனந்தம்
- காக்கைசிறகினிலே
- ஒருவன்

மூர்த்தி வீடியோ சென்ரர்

மானிப்பாய்.

T.P. 2884

(66821)



[LRC] திறப்பு விழா [LRC]

லவ்லி றெக்கோடிங் சென்ரர்

பிரதான வீதி, நெல்லியடி.

இன்று (23—06—99) புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்படுகின்றது

நீங்கள் விரும்பும் பழைய, புதிய பாடல்களை C.D. யிலிருந்து பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும் மற்றும் வீடியோ படப்பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்.

லவ்லி றெக்கோடிங் சென்ரர்

பிரதானவீதி, நெல்லியடி.

(66817)



உதவிக் கணக்காளர் பதவி (Assistant Accountant)

உதவிக் கணக்காளராகப் பணி புரிவதற்குப் பொருத்தமானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கணக்காளர் பரீட்சைகளில் பகுதி நிலைகளைச் சித்தியடைந்தோரும் இத் துறையில் அனுபவம் மிக்கோரும் விண்ணப்பிக்கலாம். தகுதி, திறமைக்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். 30-06-1999 இற்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:-

முகாமையாளர் (ஆளணி, நிர்வாகம்,)

'உதயன்'

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்,


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org